**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous — Case No. CC 4 of 2024
Preliminary Register
Sessions

Depositions of PW -4 witness for ________ { Prosecution / Defence / Court

Name : சுப்பாள்
Father's Name : க/பெ. சுப்பன்
Village :
Taluk :
Calling :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th **day of May** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**முதல்விசாரணை**

1. நான் நல்லூர் பாளையத்தில் வசித்து கை முறிவு ஏற்பட்ட பின்பு வேலைக்கு செல்ல முடியாமல் வீட்டில் இருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும்.

2. சுமார் ஒரு வருடம் 8 மாதத்திற்கு முன்பாக காலை சுமார் 8 மணியளவில் நான் கடைக்கு செல்வதற்காக வெளியே வந்த பொழுது நான் கடைக்கு செல்லும் வழியில் ஆஜர் எதிரி என் இரு கைகளையும் பிடித்து எனது வலது மணிக்கட்டை பிடித்து முறுக்கி கீழே தள்ளினார். மேலும் எதிரி என்னை தேவடியா முண்ட என கெட்ட வார்த்தையால் பேசினார்.நான் எதிரியிடமிருந்து கையை

இழுத்து அங்கிருந்து தப்பித்து ஓடி விட்டேன்.

3. நான் வழி தாங்க முடியாமல் அவ்வழியாக வந்த போக்கு வண்டி மகன் மற்றும் அருகில் இருந்த பெண்கள் என்னை போக்கு வண்டி மூலம் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மருத்துவமனையில் எனக்கு கையில் ஏற்பட்ட முறிவுக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டார்கள். மேலும் ராடு வைத்து உள்ளார்கள். நான் 15 நாட்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றேன்.நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பொழுது போலீசார் நடந்து கோபுரத்துக்கு என்னிடம் கேட்டு எழுதி என்னிடம் படித்து காண்பித்து கைரேகை பெற்றார்கள். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் என் வீட்டில் இருந்து கடைக்கு சென்ற பொழுது தான் மேற்படி சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான்.என் வீட்டில் இருந்து கடை எந்த திசையில் உள்ளது என்றால் வடக்கு திசையில் உள்ளது மேற்சொன்ன விபரத்தை போலீசார் என்னை விசாரித்த பொழுதும் குறிப்பிட்டு சொன்னேன். நான் தற்பொழுது முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை தான் போலீசார் என்னை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தின் பொழுதும் சொன்னேன் என்றால் சரிதான். பெருமாள் என்னுடைய மகன், பஞ்சு வேலை செய்து வருகிறார். எதிரியும் பஞ்சு வேலை செய்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. எதிரிக்கும் என் மகனுக்கும் பணம் வரவு செலவு உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனந்தன் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் முடிந்து நான் எதிரியின் தாத்தா தோட்டத்திற்கு சென்று பின்னர் அங்கிருந்து மருத்துவமனைக்கு சென்றேன். நான் மருத்துவமனைக்கு சென்றபோது சுமார் 12 மணியிருக்கும். மருத்துவமனையில் எக்ஸ்ரே எடுத்து பார்த்தார்கள். என் மகன் எதிரிக்கு ரூ.5 ஆயிரம் பணம் கொடுக்கவேண்டும். அதனை கொடுக்காமல் இருப்பதற்காக நான் கீழே விழுந்து ஏற்பட்ட காயத்திற்கு எதிரி அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகபொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.05.30 17:47:25 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**

**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous } Case No. CC 4 of 2024
Preliminary Register

Sessions } Prosecution
Depositions of PW - 5 witness for ________ Defence
Court

Name : சுமதி
Father's Name : க/பெ. பெருமாள்
Village :
Taluk :
Calling :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th **day of May** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**முதல்விசாரணை**

1. நான் நல்லூர்பாளையத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அசா.4 என் மாமியார். என்னுடைய கணவருக்கும் எதிரிக்கும் ஏற்கனவே பணம் கொடுக்கல், வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பாக என் மாமியார் கடைக்கு சென்ற பொழுது எதிரி என் மாமியாரிடம் பணம் என் கணவர் தர வேண்டும் என கூறி கையைப் பிடித்து முறுக்கி கீழே தள்ளி உள்ளார். அவ்வாறு கீழே தள்ளியதில் என்னுடைய மாமியாருக்கு கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. பின்னர் பல்லடம் அரசு மருத்துவமனையில் என் மாமியார் 15 நாட்கள் தங்கி சிகிச்சை பெற்றார் மருத்துவமனைக்கு அவர் சென்ற பொழுது நானும் உடன் சென்று இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவத்தை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.05.30 17:47:33 +0530

**Signature of Witness**

நீதித்துறை நடுவர்

சூலூர்